பக்கங்கள்: 10 விலை : 20/-

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 30 வெள்ளிக்கிழமை 12.06.2020 கதிர் 87

## மங்கள வெளியேற ரணில் காரணமா?

கொழும்பு, ஜூன் 12
நாடாளுமன்றத் தேர்தல் போட்டியிலிருந்து முன்னாள் அமைச்சர் மங்களசமரவீர வெளியேறுவதற்கு ரணில் விக்ரமசிங்க வகுத்த வியூகமே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

2

# ஊரடங்கை சட்டப்படி நடைமுறைப்படுத்துக!

## மனித உரிமைகள் ஆணைக்குழு அரசுக்கு ஆலோசனை தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 12
நாட்டில் ஊரடங்குச் சட்டத்தை சட்டத்தின் ஆட்சி நடைபெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் நடைமுறைப்படுத்துங்கள் என்று அரசுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு சிபாரிசு செய்திருக்கின்றது.

ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு கடந்த 8 ஆம் திகதியிட்டு ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி என். தீபிகா உடகம அனுப்பி வைத்த கடிதத்திலேயே இந்தப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் ஊரடங்குச் சட்டம் உரிய சட்டமுறைப்படி நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்து கடந்த மே மாதம் 3 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் எழுத்து மூலம் முறைப்பாடு செய்திருந்தார்.

2

## சுதந்திர சதுக்கத்தில் மீட்கப்பட்ட சடலம்!



கொழும்பு, ஜூன் 12
கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்திலிருந்து சடலமாக கண்டெடுக்கப்பட்டவரின் உயிரிழப்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதை அடுத்து, பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

2

## சஜித் அணியிலிருந்து மூன்றாமவர் விலகல்

கொழும்பு, ஜூன் 12
ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிடும் மற்றுமொரு வேட்பாளர் போட்டியில் இருந்து விலகிக்கொண்டுள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் வேட்புமனுவைத் தாக்கல்செய்திருந்தநிலுக்காஏக்கநாயக்கவே போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

2

## புலிகளின் ஆயுதங்கள் சிக்கின!



மட்டக்களப்பு, ஜூன் 12
மட்டக்களப்பு - கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வாகனேரி, குளத்துமடுப் பகுதியில் விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் சில ஆயுதங்கள், இன்று வெள்ளிக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2



## வவுனியாவில் சமல்

வவுனியா, ஜூன் 12
விவசாய நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் சமல் ராஜபக்ஷ வவுனியாவுக்கு இன்று வெள்ளிக்கிழமை விஜயம் மேற் கொண்டிருந்தார்

2

## போராளிகள் மீது அக்கறை என்பது சுமந்திரனின் பொய்

### சாட்டையைச் சுழற்றுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் மீது சுமந்திரன் அக்கறை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள கருத்துக்கள் அனைத்தும் பெய்யானவை. அவருடைய கட்சிக்காரரே மறுதலிக்கும் அளவிற்கு கூச்சம் இல்லாமல் அவர் பெய்பேசி வருவதை ஏற்கவே முடியவில்லை.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல் கட்சியின் தலைவர்

2

## அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி தமிழ்க் கூட்டணி ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 12
சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கூட்டணியின் தலைவர்களான வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா, வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் ஆகியோர் இந்தக் கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 10 முதல் 15 வருடங்களாகத் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 91 அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான மேன்முறையீடாக இந்தத் கடிதத்தை ஜனாதிபதிக்குத் தாங்கள் அனுப்புவதாகத் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குற்றவாளிகளாகக் காணப்பட்டுத் தண்டனை அனுபவிப்போர் - 29, கீழ் நீதிமன்றங்களில் குற்றவாளிகளாகக் கணப்பட்டு மேல்

2



## மங்கள வெளியேற......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், மங்கள சமரவீர தனது முடிவை உத்தியோகபூர்வமாக அறிவிக் கும் வரை, அதனை சஜித் பிரேமதாஸ அறிந்திருக்கவில்லை என முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித் துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றில் பேசிய முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அவர்,

ரணிலின் அரசியல் செயற்பாடுகளின் இறுதி, சஜித்துக்குப் புரியாத புதிராகும். நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும், இவ்வாறே பல்வேறான அரசியல் காய்நகர்த்தல்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிலையில், ரணிலின் அரசியல் வியூகத்தால், ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட வேட்பாளர் பட்டியலில் சரிவு ஏற்பட்டுள்ளது. தென் மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளது. இது போன்ற பல்வேறான சம்பவங்களை மக்கள் பார்க்கலாம் - என்றார்.

## சுதந்திர சதுக்கத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர சதுக்க வளாகத்திலிருந்து இன்று காலை 7 மணியளவில் ஆணொருவரின் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ராஜகிரிய பகுதியைச் சேர்ந்த 64 வயதான ஆண்ணொருவரின் சடலமே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவரின் உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், சடலத்துக்குக் கீழிருந்து 9 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கியொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சடலம் மீதான நீதவான் விசாரணைகள், கொழும்பு பிரதம நீதிவான் லங்கா ஜயரத்னவினால் இன்று முற்பகல் நடத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும், இந்தச் சம்பவம் தொடர்பில் கறுவாத்தோட்ட பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## அரசியல் கைதிகளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றங்களில் மேன்முறையீடு செய்து முடிவுக்காகக் காத்திருப்போர் - 17, குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கத்தில் உள்ளோர் - 38, குற்றத்தை ஏற்று தண்டனை பெற்றோர் - 7 என மொத்தம் 91 அரசியல் கைதிகள் இப்போது சிறைகளில் உள்ளனர் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்கள் சிறைகளில் நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டிருப்பதால் அவர்களது வாழ்க்கையும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீண்ட காலம் இவர்கள் சிறையில் வாடுவதனால் கருணையோடும் இரக்க சிந்தனையோடும் இவர்களது பிரச்சினை அணுகப்படவேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருக்கின்றது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி.

இவர்களை விடுவிப்பது எதிர்காலப் பேச்சுக்களுக்கான பொருளுள்ள பொறுப்புள்ள முன்னோடி நடவடிக்கையாக இருக்கும் என்றும் கடிதம் குறிப்பிடுகின்றது.

அரசியல் கைதிகளை விடுவிப்பது தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையையும் நம்பத்தகுந்த சூழலையும் உருவாக்கும் என்றும் கடிதம் கூறுகின்றது.

எனவே குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கியும், ஏனையவர்களுக்கு ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தியும் விடுவிக்கப்படவேண்டும் என்றும் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## ஊரடங்கை சட்டப்படி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தல் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றை மேற்கொள்காட்டிய சுமந்திரன், அதனடிப்படையில் இலங்கையில் இப்போது சட்டப்படி ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று முறையிட்டிருந்தார்.

இப்போது ஜனாதிபதியின் செயலாளருக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும், பதில் பொலிஸ்மா அதிபருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் விளக்கமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் எந்த இடத்திலும் தற்போதைய ஊரடங்கு சட்ட முறைப்படி நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை.

ஆனால் ஊரடங்கை சட்ட முறைப்படி நடைமுறைப்படுத்துங்கள், அதற்கான வழிமுறைகள் இவை என்று சில விடயங்களை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஊரடங்கு உத்தரவு போன்ற விடயங்களில் வெளிப்படைத் தன்மை பேணப்படுவது கட்டாயமானது என்று சுட்டிக்காட்டியுள்ள ஆணைக்குழு, தற்போது ஜனாதிபதியின் ஊடகப் பிரிவினால் அறிவிக்கப்படும் ஊரடங்கு உத்தரவு, ஒரு பொதுப் பிரகடனத்தில் மக்கள் பார்வைக்கு இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்தி அதன் கீழும் -

அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்தாமல் வேறு வழிகளிலும் -

ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்றும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நோய்ப் பரவலுக்கான தடுப்பு மற்றும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் ஊரடங்கு போன்ற மக்கள் நடமாட்டக் கட்டுப்படுத்தலை அறிவிக்கலாம் எனினும் அது நாடு முழுமைக்கான ஊரடங்குக்குப் பொருத்தமற்றது என்றும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. தற்போதைய ஊரடங்கின் கீழ் பல்லாயிரம் பேர் கைது செய்யப்பட்டு, பல வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமையால் இது விடயத்தில் சட்டத்தின் ஆட்சி முழுமையாகவும் முறையாகவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## வவுனியாவில் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா - போகஸ்வெவ பகுதிக்கு விஜயம் செய்த அவர் அந்தப் பகுதியிலுள்ள மகாகம்பிலிவெவ குளத்தின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்தக் குளமானது 3 கோடி 20 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதுடன், அதன் மூலம் 400 ஏக்கர் வரையிலான விவசாயச் செய்கையை முன்னெடுக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## புலிகளின் ஆயுதங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழைச்சேனை கடதாசி ஆலை புலனாய்வுப் பிரிவினருக்கு இந்த விடயம் தொடர்பாகத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து அந்தத் தகவலுக்கமைய, வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் வாகனேரிக் குளத்துமடுக் காட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது, விடுதலைப் புலிகளின் முகாம் இருந்த பகுதியில் சில ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள் ளன.

இதில் ஐந்து கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்காக அணியும் ஆடை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன. இவைகள் வாழைச்சேனைப் பொலிஸில் பாரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சஜித் அணியிலிருந்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலுக்கா ஏக்கநாயக்க மத்திய மாகாணத்தின் முன்னாள் ஆளுநராவார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்த மூன்று பேர் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.

இவர்களில் முக்கியமானவர் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர என்பது குறிப்பிடத்தக்கது.

## போராளிகள் மீது அக்கறை என்பது ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். யாழ். ஊடக அமையத்தில் இன்று நண்பகல் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில வாரங்களுக்கு முன்பாக ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை, ஆயுதப் போராட்டத்தை நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சாரப்பட பல்வேறுபட்ட கருத்துக்கள் சுமந்திரனால் கூறப்பட்டன.

அவர் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவருடை கருத்திற்கு கண்டனம் தெரிவித்து பல அறிக்கைகளை வெளியிட்டதுடன், சுமந்திரன் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தலைமைப் பீடத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்திருந்தார்கள்.

தமிழரசுக் கட்சி மட்டுமல்லாமல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அங்கம் வகிக்கின்ற ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் கடும் கண்டனங்களைத் தெரிவித்து, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இந்த விவகாரங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் வந்த சுமந்திரன் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். அந்தச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் பேராளிகளைக் கட்சியில் இணைத்துக் கொள்வது தொடர்பாக அழுத்தங்களை தான் கொடுத்திருந்தார் என்று தெரிவித்திருந்தார். தான் ஒருவன் மட்டும்தான் முன்னாள் போராளிகளை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளையில் செயலாளராக உள்ள சட்டத்தரணி தவராசா, முன்னாள் போராளிகளை இணைப்பதற்கு தான் கோரிக்கை விடுத்ததாக சுமந்திரன் கூறுவது முழுமையான பொய் என்று தெளிவுபடக் கூறியுள்ளார்.

முன்னாள் போராளிகளை கட்சியில் இணைப்பது என்பது பொதுவான கருத்தாக இருந்தது, சுமந்திரன் தான் மட்டும் தான் அந்த கோரிக்கையை முன்வைத்தார் என்று சொல்வது முற்றிலும் பொய்யான தகவல் என்றும் தவராசா தனது கருத்தில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும்கூட வவுனியாவில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் தங்களுடன் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் பேசினர் எனவும், அவர்களை இணைப்பது தொடர்பில் தமிழரசு கட்சியிலும், கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளுடனும் பேசி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

தேர்தல் நெருங்கும் சமயத்தில் போராளிகள் தொடர்பாகவும், அவர்களைக் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்வது தொடர்பாகவும், கட்சியின் தலைவரும், கூட்டமைப்பின் பேச்சாளரும் ஒவ்வொரு கருத்துக்களை கூறிவருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

தேர்தலுக்காக நாங்கள் எல்லோரும் போராளிகளுக்காக செயற்படுகின்றோம் என்ற தொணியில் கருத்துக்களை வெளியிடுவதையும் எங்களால் காணக்கூடியதாக உள்ளது.

உண்மையாகவும் நேர்மையாகவும் பேராளிகளை அரசியலில் இணைத்துக் கொள்ளுகின்றார்களா? இல்லாவிட்டால் தேர்தலுக்காக போராளிகளில் கரிசனை உள்ளது போன்று காட்ட முயற்சிக்கின்றார்களா? என்பது முக்கியமான கேள்வியாக எழுந்துள்ளது.

ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னவர்கள், ஆயுதம் தூக்கிப் போராடிய போராளிகளை எவ்வாறு கட்சியில் ஏற்றுக்கொள்வார்கள் என்பது ஒரு முரண்பாடனதும், எள்ளிநகையாடக் கூடியதுமான கருத்தாக உள்ளது.

சிங்கள ஊடகவியலாளரிடம் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறிவிட்டு, இங்குவந்து போராளிகளை இணைக்கப் போவதாக முரண்பாடான கருத்தை கூறும் சுமந்திரன். வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம், ஆகவே தமிழ் மக்கள் எங்களுக்கு இம்முறையும் வாக்களிக்க வேண்டும், நாங்கள் வந்தால்தான் எல்லாவற்றையும் சாதிப்போம் என்று கூறுகின்றார்.

இது தவிர கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு, அபிவிருத்தி தொடர்பான விடயங்களையும் சுமந்திரன் கூறியுள்ளார். கைதிகள் விடுவிப்பு தொடர்பில் நான் சுமந்திரனிடம் ஒரு கேள்வியைக் கேட்கின்றேன்.

கைதிகள் சில பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். சிலர் நீதிமன்றங்களினால் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். சிலருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் சிலருடைய வழக்குகள் இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே அரசியல் கைதிகளில் யாராவது ஒருவரை நாடாளுமன்றத்தின் ஊடாகவோ அல்லது ஜனாதிபதி, பிரதமர் ஊடாகப் பேசியோ, எந்த ஓர் அரசியல் கைதியாவது விடுவிக்கப்பட்டாரா?

சட்டத்தரணிகளின் முயற்சியின் ஊடாக சிலர் பிணையில் விடுவிக்கப்படுவதும், சிலர் குற்றவாளிகளாக காணப்பட்டதும்தான் நடந்து முடிந்திருக்கின்றதே தவிர, சுமந்திரன் கூறுவது போல் தமிழ் தேசியக் கூட்டமைப்பாலோ அல்லது அதன் தலைமைத்துவத்தாலோ விடுவிக்கப்பட்டார்கள் என்ற விடயம் நடந்ததாக இல்லை.

அரசியல் கைதிகளுக்காக சில விடயங்களைச் சாதித்தோம் என்று சுமந்திரன் ஊடங்களின் முன் நின்று பொய் கூறுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயம். இதே போன்றுதான் காணி விடுவிப்பும்.

வடக்கு மாகாணத்தில் எத்தனை ஏக்கர் காணிகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முயற்சியால் விடுவிக்கப்பட்டன? அதைச் சுமந்திரன் தெளிவுபடுத்த வேண்டும். இன்னும் ஆயிரக்கணக்காக ஏக்கர் காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன. இதுதான் யதார்த்தம்.

அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன விடயங்களை சாதித்துள்ளது என்பதைக் கூறவேண்டும்.

புதிய அரசியல் சாசனத்தைக் கொண்டு வர முடியாமலும், அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாமலும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் எந்தத் தீர்வும் இல்லாத நிலையில், நிலங்களை முழுமையாக விடுவிக்க வைக்காத நிலையில் அரசிடம் இருந்து சில கோடிகளை பெற்றுக்கொண்டு வீதிகளை போட்டோம், கிணறுகளைத் திருத்தினோம், கோவில்களைக் கட்டினோம் என்று சொல்வதற்குக் கூட்டமைப்பால் மட்டும் தான் முடியும்.

எத்தனை போருக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது? அரசுடன் இணைந்திருந்த 5 வருடத்தில் வேலைவாய்ப்புடன் கூடிய எந்த அபிவிருத்தி வடக்கில் செய்யப்பட்டது?

தேர்தலுக்காக, தமிழ் மக்களை ஏமாற்றக்கூடிய வகையில் அவருடைய கட்சியில் இக்கின்றவர்களாலேயே கண்டிக்கக் கூடிய விதத்தில், தொடர்ந்தும் கூச்சம் இல்லாமல் பொய் பேசி வருவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. இதனைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழரசுக் கட்சிக்குள் தற்போது பல அணிகள் இருக்கின்றன. புலிகளை எதிர்ப்பவர்களும், புலிகளை ஆதரிப்பவர்களுமான கூட்டுக்களும் அந்த கட்சிக்குள் உருவெடுத்துள்ளது. இது தமது தேர்தல் வெற்றிகளை உறுதிப்படுத்தவும், தமக்கான விருப்பு வாக்கினை பெற்றுக் கொள்வதற்குமான பிரிவுகளே!.

ஒருவரை ஒருவர் தோற்கடிக்க வேண்டும் என்ற முனைப்புக்களே தமிழரசு கட்சிக்குள் இப்போது முன்னெழுந்துள்ளது - என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய மார்க்கத்தைத் தேடுவோம்

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அரசமைப்புச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டால் கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு கொடுக்கும் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

அந்த ஆதரவு அரசமைப்பு சீர்திருத்தத்துக்கான ஆதரவாக இருக்குமே தவிர, அரசாங்கத்திற்கான ஆதரவாக அமையாது என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தேர்தல் முடிவுகளுக்கு முன்னரே கூட்டமைப்பின் ஒரு நிலைப்பாட்டை அவர் இதன் மூலம் தெளிவுபடுத்துகின்றார் என்று கொள்ளலாம்.

அது – தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் அரசமைப்புத் திருத்த முயற்சிக்கு மட்டுமே எதிர்காலத்தில் அமையக் கூடிய – பெரும்பாலும் பொதுஜன பெரமுன தலைமையிலான – அரசுக்கு ஆதரவு தருவோம், பிற விடயங்களுக்கு அல்ல என்பதாகும்.

இந்தக் கூற்றை, ஜே.வி.பியை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி அமைப்பின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கா அண்மையில் சுட்டிக்காட்டிய கருத்துடன் கணக்கில் எடுத்து நாம் கவனிக்க வேண்டும்.

2010 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவடைந்த கையோடு ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார் மஹிந்த ராஜபக்ஷ. இலங்கையின் சரித்திரத்தில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய அளவுக்குப் பெருவெற்றியை – 18 லட்சத்துக்கும் அதிகமான மேலதிக வாக்குகளை – அவர் பெற்று சாதனை படைத்தார். அந்தக் கையோடு நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்தினார். ஆனால் அப்போது கூட மஹிந்தரின் கட்சியினால் மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பலத்தைப் பெற முடியவில்லை. அச்சமயம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த சுமார் இருபது எம்.பிக்கள் குத்துக் கரணம் அடித்தே அரசமைப்புக்கான 18ஆவது திருத்தத்தை மஹிந்த தரப்பு நிறைவேற்ற உதவினர் என அநுரகுமார சுட்டிக்காட்டுகின்றார்.

அதாவது மஹிந்த தலைமையிலான பொதுஜனபெரமுன எவ்வளவுதான் முயற்சித்தாலும் நாடாளுமன்றத்தில் தனித்து அறுதிப் பெரும்பான்மை பெறலாமே தவிர, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறமுடியாது என்பதே அவரின் கருத்து. அதுவே பொதுவாக நோக்கர்களின் கணிப்பாகவும் உள்ளது.

அத்தகைய சூழ்நிலையில் ஆளும் தரப்பு ஒரு முடிவை எடுக்க வேண்டியதாக இருக்கும்.

தான் விரும்பும் அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவதாயின் –

ஒன்றில், தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகள் தரப்பில் வரக் கூடிய கட்சிகளின் எம்.பிக்களைப் பிரித்துக் கணிசமானோரைத் தன்னுடன் சேர்க்க வேண்டும்.

அல்லது, தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த இரண்டில் ஒன்றை முன்னெடுத்தால்தான் தாம் நினைத்தபடி அரசமைப்புத் திருத்தம் உட்பட தாம் எதிர்பார்க்கும் திட்டங்களைப் புதிதாக ஆட்சிக்கு வரக் கூடிய தரப்புக்கு செய்யக் கூடியதாக இருக்கும் என்று கணிப்பிடப்படுகின்றது.

இந்த இரண்டில் ஒன்றை எதிர்பார்த்துத்தான் தமிழ்க் கூட்டமைப்பு அரசியல் நகர்த்தலைத் திட்டமிடுகின்றது.

புதிதாக ஆட்சி அதிகாரத்தைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஜனவரி 3ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

அப்போது புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

அந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தமிழர் தரப்பும் சம்பந்தப்பட்டு, அதனூடாகத் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் விடயங்களை வென்றெடுப்பது பற்றியே சுமந்திரன் பிரஸ்தாபித்துள்ளார்.

நல்லது. நம்பிக்கையின் மீதுதான் எல்லோரதும் எதிர்பார்ப்புகளும் வாழ்க்கையும் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

ஆனால், தீவிர பௌத்த, சிங்கள தேசிய சிந்தனை கொண்ட ராஜபக்ஷக்கள் மற்றும் அவர்களுடைய தரப்பில் உள்ள பேரினவாத சக்திகளுடன் ஒன்றிணைந்து ஏதோ ஓர் உடன்பாட்டில் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் தீர்வுக்கான ஏற்பாடு ஒன்றுக்கு இணங்கி வரலாம் என்று நம்புவதும், அதனடிப்படையில் அரசியல் காய் நகர்த்தல்களை முன்னெடுப்பதும் பயனுள்ளவையா என்று கேள்வி எழாமல் இல்லை.

புதிதாக அமையக் கூடிய கோட்டாபய தலைமையிலான அரசுக்கு, நாடாளுமன்ற அரசியலில் தேவைகள், கட்டாயங்கள், எதிர்பார்ப்புகள், அழுத்தங்கள் எதுவாக இருந்தாலும் அதனை அல்லது அவற்றை நிறைவு செய்வதற்காகத் தமிழர் தரப்பின் அபிலாஷைகள் உள்ளடங்கிய நியாயமான அரசியல் தீர்வு ஒன்றுக்கு விட்டுக் கொடுத்து இறங்கி வருவார்கள் என்று எதிர்பார்ப்பது அபத்தமாகத்தான் இருக்கும்.

ஆகவே, வெறும் நாடாளுமன்றப் பலத்தை வைத்துக் கொண்டு புதிய அரசுடன் தீர்வுக்கு முயலலாம் என்ற நம்பிக்கையை ஒரு புறம் தள்ளி வைத்து விட்டு, புதிதாக அமையக் கூடிய அரசுக்கும், அதன் தலைவரான ஜனாதிபதிக்கும் அழுத்தம் கொடுத்து, வழிக்குக் கொண்டு வரக் கூடிய மாற்று உபாயம் குறித்தும் தமிழர் தரப்பு சிந்திப்பதும், அத்தகைய திட்டம் ஒன்றைக் காணுவதும் முக்கியமானது. அது குறித்துத் தமிழ்த் தரப்புகள் பேசுவதுதான் இன்றைய நிலையில் அவசியமாகும்.

# அரசாங்கத்திடம் சரணாகதி அரசியல், சலுகை அரசியலை நாடியவர்களால் எதுவும் சாதிக்க முடியாது; ஞா.சிறிநேசன்

**கொழும்பு, ஜூன் 12**

**உரிமை என்னும் ஆணி வேரையறுக்கும் அரசாங்கத்திடம் சரணாகதி அரசியல், சலுகை அரசியலை நாடியவர்களால் எதுவும் சாதிக்க முடியாது எனத் தமிழ் தேசியக் கூட்டமைப் பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுத் தேர்தல் வேட்பாளருமாகிய ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.**



இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை யிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீநேசன் கூறுகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் அமைத்து 7 மாதங்கள் ஆகின்றன. இந் நிலையில், அரசாங்கத்தின் கருத்துக்கள், நடவடிக்கைகள் தமிழ் மக்களை அரவணைக்கின்றதா, அலட்சியப் படுத்துகின்றதா என்பதை நாம் ஆராய்ந்தறிய வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

தேசிய தின விழாக்களில் சிங்களத்தில் மாத்திரம் தேசிய கீதம் இசைக்கப்படுவதுடன் தமிழில் இசைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்பு இரு மொழிகளிலும் தேசியகீதம் இசைக்கப்பட்டது.

தமிழ் மக்களின் தைப்பொங்கல் பண்டிகையை தேசிய பண்டிகையாகக் கொண்டாட முடியாதென அரசு குறிப்பிட்டுள்ளது, இவ்விழாவினைக் கொண்டாடினால் வீண்செலவு ஏற்படும் என்றது இந்த அரசு. இதற்கு முன்பு தைப்பொங்கல் தேசிய கொண்டாட்டமாகக் கொண்டாடப்பட்டது.

இந்து கலாசார அமைச்சு, கிறிஸ்தவ விவகார அமைச்சு, இஸ்லாமிய விவகார அமைச்சுகள் போன்றன இல்லாமல் செய்யப்பட்டு, பௌத்தசாசன அமைச்சு மாத்திரமே தற்போதைய அரசாங்கத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய மதங்களுக்கான கணிப்பு குறைக் கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்கள் எல்லாம் மரணித்துள்ளனர், அதாவது கொல்லப்பட்டு விட்டனர். விசாரணைகள் இல் லாமல் இந்தக் கருத்தினை ஜனாதிபதி கூறியுள்ளார்.

அப்படியானால், இவர்களைக் கொன்றவர்கள் யார்? காணாமல் போனவர்களைக் காண்பதாயின் மண்ணைத் தோண்டிப் பாருங்கள் என்று வீரவன்ச கூறியுள்ளார். இக்கருத்து எமது மக்களைக் கேவலப்படுத்துவதாக அமைந்துள்ளதோடு, இதன் பின்னணி என்ன? காணா மல் ஆக்கப்பட்டவர்களை தமிழர்கள் மறந்து விடவேண் டும் என்றும் சொல்லப்பட்டது.

தமிழர்களின் பிரச்சினை சோறும் தண்ணீரும் மட் டும்தான், வேறு எப்பிரச்சினையும் கிடையாது என மகிந்தானந்த கூறியிருந்தார். இதேவேளை, தமிழர் களுக்கான அதிகாரப் பகிர்வோ அரசியல் தீர்வோ சாத்தியமில்லை என ஜனாதிபதி கூறியிருந்தார்.

மக்களுக்கான குடியியல் நிர்வாகம் அல்லது சிவில் நிர்வாகம் இராணுவமயமாக்கலுக்கு உள்ளாகின்றது. யாழ்ப்பாண மிருசுவிலில் குழந்தை உட்பட 8 அப்பாவி களைக் கொலை செய்த இராணுவ அதிகாரிக்கு நீதிமன்றம் மரண தண்டனைக்கான தீர்ப்பினை வழங்கியது. இவர் தற்போதைய ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலையாகியுள்ளார். ஆனால் ஆனந்த சுதாகரன் உட்பட பல அரசியற் கைதிகளுக்கான பொது மன்னிப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எப்படியாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தினைப் பெற்று 19ஆவது யாப்புத் திருத்தத்தினை நீக்கிவிட்டு ஜனாதிபதியின் அதிகாரங்களை உயர்த்துவதற்கான நோக்கத்தினை இந்த அரசாங்கம் கொண்டுள்ளது. இப்படியானால் நாட்டில் சர்வாதிகாரம் ஓங்க வாய்ப்புள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் இடங்களைக் கண்டுபிடித்தல் என்ற போர்வையில், தமிழ் பேசும் மக்க ளின் பாரம்பரிய நிலங்கள் பௌத்தமயமாக்கலுக்கு உள்ளாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனைச் செய்வதற்காக முன்னாள் இராணுவத் தளபதியும், பாது காப்புச் செயலாளருமான கமால் குணரத்ன தலைமையில் 11பேர் கொண்ட ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் இராணுவ அதிகாரிகளும், பிக்குகளும் ஆவர். ஒரு தமிழர் கூட நியமிக்கப்படவில்லை. மேலும், ஞானசார தேரர், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் பௌத்த பூமியே என்றும், இது தொடர்பாக தமிழர்கள் புலம்பக்கூடாது என்றும் எச்சரித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு, நீதி, சட்டத்தை மதிக்கும் சமூகத்தினை உருவாக்குவதற்கான 13 பேரைக் கொண்ட ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. இதிலும் முன்னாள், இந்நாள் என இராணுவ, பொலிஸ் அதிகாரிகளே உள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில், குறிப்பாக நல்லாட்சிக் காலத்தில் 30/1, 34/1, 40/1 பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. உண்மையைக் கண்டறிதல், நீதியினை வழங்குதல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் இவற்றில் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்ட, தமிழருக்குச் சாதகமான இத்தகைய பிரேரணையை இலங்கையின் தற்போதைய அரசு நிராகரித்துவிட்டது. ஆயின் யுத்த காலத்தில் தமிழருக்கு ஏற்பட்ட அநீதிக்கான நீதி கிடைப்பதற்கான வழிகள் மூடப்பட்டுவிட்டன.

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட தொற்றாளர் களை தொற்றுக்கள் இல்லாத மட்டக்களப்பு, வவுனியா போன்ற தமிழ் பேசும் மக்கள் உள்ள மாவட்டங்களுக்குக் கொண்டு வந்து தங்க வைத்திருப்பதும் தமிழ் மக்களுக்கு அதிருப்தியை அளித்துள்ளது.

தற்போதைய ஜனாதிபதி, தான் பௌத்த சிங்களவர்க ளால் தெரிவு செய்யப்பட்டவர் என்று கூறி வருகின்றார். ஆயின் ஏறத்தாழ 6 இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் பேசும் மக்கள் ஜனாதிபதிக்கு வாக்களித்தமையை மறந் துள்ளார். கிறிஸ்தவர்களும் ஜனாதிபதிக்குக் கணிசமாக வாக்களித்துள்ளனர் அதனையும் மறந்து விட்டார்.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் அரசியல் தீர்வுக்காக முன்னெடுக்கப்பட்ட முயற்சி இடைக்கால அறிக்கை வரை முன்னேற்றம் அடைந்தது. தற்போதைய அரசாங்கத்தில் அத்தீர்வு முயற்சி கைவிடப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்கனவே செய்யப்பட்ட அபிவிருத்திகள், தொழில் வாய்ப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இப்படியெல்லாம் கோட்டாபய அரசாங்கத்தின் செயற் பாடுகள் எதிர்மறையாக நகரும் போது அக்கட்சிக்கும், அதன் பின்னால் நின்று சுயநல அரசியல் செய்யும் கட்சி களுக்கும் எந்த அடிப்படையில் தமிழர்கள் வாக்களிக்க முடியும்?

உரிமை என்னும் ஆணி வேரையறுக்கும் அரசாங்கத் திடம் சரணாகதி அரசியல், சலுகை அரசியலை நாடியவர்க ளால் எதுவும் சாதிக்க முடியாது. மொத்தத்தில், தற்போதைய அரசாங்கம் தமிழ் மக்களை அலட்சியப்படுத்துகின்ற செயல்களில்தான் ஈடுபடுவதாகத் தெரிகின்றது.

எனவே, தமிழர்கள் விழிப்பாக இருக்க வேண்டும். பேரின அடிப்படைவாதிகளுக்கு அடிவருடும் தமிழ் கட் சிகள், அபிவிருத்தி என்ற ஏமாற்று வித்தைகள் மூலம் தமிழர்களின் எதிர்காலத்தை இருளாக்கி விடுவர், கவனம் தமிழர்களே மிகக்கவனம் என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# 2020இன் சிறந்த கல்வி நிலையங்கள் பட்டியலில் முதலிடத்தில் தமிழகம்



2020ஆம் ஆண்டின் இந்தியாவின் சிறந்த கல்வி நிலையங்களின் பட்டியலில் சென்னை ஐ.ஐ.ரி. முதலிடத்தைப் பிடித்துள்ளது. பல பிரிவுகளில் தமிழகத்தைச் சேர்ந்த கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் சிறந்த தரவரிசையைப் பெற்றுள்ளன. இது குறித்து மேலும் தெரியவருவதாவது: -

இந்தியாவில் உள்ள சிறந்த கல்வி நிலையங்களின் பட்டியல் இந்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமேஷ் போக்ரியாலால் நேற்று வெளியிடப்பட்டது. அதில், சிறந்த கல்வி நிலையங்களின் பட்டியலில் சென்னையில் உள்ள ஐ.ஐ. முதலிடத்தைப் பிடித்தது. சென்னை அண்ணா பல்கலைக்கழகம் 20ஆவது இடத்தைப் பிடித்தது. சென்னைப் பல்கலைக்கழகம் 41ஆவது இடத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 84ஆவது இடத்தையும் பிடித்தன. அனைத்துச் சிறந்த கல்வி நிலையங்களின் பட்டியலில் முதல் நூறு இடங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றன. இதற்குள் புதுடெல்லியிலிருந்து 6 கல்வி நிலையங்களும் மகாராஷ்டிராவிலிருந்து 12 கல்வி நிலையங்களுமே இடம்பெற்றன. பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரை கர்நாடகாவில் உள்ள இந்தியன் இன்ஸ்ட்டியூட் ஒஃப் சயன்ஸ் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் 12வது இடத்தைப் பிடித்துள்ளது. முதல் நூறு இடங்களுக்குள் தமிழகத்தைச் சேர்ந்த 18 பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன. பொறியியல் கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரை சென்னை ஐ.ஐ.ரி. நாட்டிலேயே முதலிடத்தைப் பிடித்துள்ளது.

# வழக்காடுவோர் மீது பொருளாதாரத் தடை

## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிப்பு

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் போர்க்குற்றங்கள் செய்தனவா என்பது தொடர்பான விசாரணையில் ஈடுபட்டுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்ற ஊழியர்களுக்கு எதிராக பொருளாதார மற்றும் பயணத்தடைகளை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது: சர்வதேச நீதிமன்றச் சட்டத்தரணி ஃபடூ பென்சவுடா உட்பட்ட குழுவினரும், வேறு சில மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் இணைந்து ஆப்கானிஸ்தானில் 2003ஆம் ஆண்டிலிருந்து 2014ஆண்டுக்கு இடையில் அமெரிக்கப் படைகள் நிகழ்ந்திய குற்றங்களை வெளிப்படுத்துவதற்குப் பன்னாட்டு நீதிமன்றில் வழக்கைத் தொடர்ந்தனர்.

இதில் தலிபான்கள் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை, ஆப்கானிய அதிகாரிகளால் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுகள் அடங்குகின்றன. ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றங்கள் நடந்திருப்பதாகவும், பன்னாட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரம் இருப்பதால் அதை விசாரிப்பதற்கு சர்வதேச நீதிமன்றம் முடிவு செய்தது. இந்த நிலையிலெயே குறித்த வழக்கை முன்னெடுக்கின்றவர்கள் மீது அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது. ட்ரம்பின் இந்த நடவடிக்கையை மனித உரிமை ஆர்வலர்கள் கண்டித்துள்ளனர். மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் வொஷிங்டன் நகர இயக்குநராக இருக்கின்ற ஆண்ட்ரியா பிரசோவ், இந்த நடவடிக்கை 'உலகளாவிய சட்ட விதிக்கு அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றுள்ளார்.

# நியூசிலாந்திலும் சிலை நீக்கம்!

நியூசிலாந்தின் ஹாமில்டன் நகரில் நிறுவப்பட்டிருந்த பிரிட்டன் கடற்படைத் தளபதியான ஜோன் ஃபேன் சார்லஸ் ஹாமில்டனைச் சித்திரிக்கின்ற சிலை அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது. 19ஆம் நூற்றாண்டில் அவர் பூர்வீக மக்களைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டே அந்தச் சிலை அகற்றப்பட்டது. ஜோர்ஜ் ஃபிளாய்டின் சாவைத் தொடர்ந்து அமெரிக்காவில் தொடங்கிய போராட்டங்களின் ஒரு பகுதியாகக் காலனித்துவவாதிகள் மற்றும் அடிமை வர்த்தகர்களைச் சித்திரிக்கின்ற சிலைகளைப் பொது இடங்களில் நிறுவியமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் சிலைகள் அகற்றப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே நியூஸிலாந்தில் இந்தச் சிலை அகற்றப்பட்டுள்ளது.







# 4ஆவது இடத்தில் இந்தியா

சர்வதேச அளவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் இந்தியா நான்காவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. தற்போதைய நிலவரப்படி 2இலட்சத்து 93ஆயிரத்து 754 பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன் பிரிட்டன் 2இலட் சத்து 91ஆயிரத்து 588 தொற்று நோயாளிகளுடன் நான்காவது இடத்தில் இருந்தது. இந்த நிலையில் தற்போது அந்த இடத்தை இந்தியா பிடித்துள்ளது. அமெரிக்கா, பிரேசில் மற்றும் ரஷ்யா வுக்கு அடுத்ததாக இந்தியா உள்ளது. மே மாதம் 24ஆம் திக தியன்று தொற்றால் பாதித்தவர்களைக் கணக்கிடுகின்ற குறித்த பட்டியலில் 10 இடத்தில் இருந்த இந்தியா இந்த நான் காவது இடத்தை 18 நாள்களில் அடைந்திருக்கிறது. இது இன்னமும் அதிகரிக்கும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

# சவூதியைத் தாக்கிய ஏவுகணைகள் ஈரானின் தயாரிப்புக்குட்பட்டவை

## ஐ.நா. செயலர் தெரிவிப்பு

கடந்த ஆண்டு சவூதி அரேபியாவின் எண்ணெய்க் கப்பல், அபா விமான நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்ட குரூஸ் ரக ஏவுகணைகள் 'ஈரானிய வம்சாவளியைச் சேர்ந்தவை' என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குத்ரெஸ் தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையிடம் கடந்த வியாழக்கிழமை கையளித்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சவூதி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையடுத்து 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும், 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலும் அங்கு தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் அதனுடன் தொடர்புடைய ட்ரோன் உட்பட்ட பொருள்களும் அமெரிக்காவால் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் பல பொருள்கள் 'ஈரானிய வம்சாவளியைச் சேர்ந்தவை' என்று குத்ரெஸ் கூறினார். சில பொருள்களில் ஈரானின் வணிக நிறுவனம் ஒன்றின் தயாரிப்பைப் போன்ற வடிவமைப்பு, பண்புகள் உள்ளன என்றும் குத்ரெஸ் தெரிவித்தார். குத்ரெஸின் மேற்படிக் கருத்துக்கு ஈரான் தரப்பில் எவ்வித பதிலும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், மேற்படித் தாக்குதல்கள் குறித்த தன்மீதான குற்றச்சாட்டுகளை ஈரான் மறுத்துக் கருத்துத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சபரிமலை பூஜைக்கு தடை அறிவிப்பு!



கொரோனா காரணமாக ஏற்படுத்தப்பட்ட ஊரடங்கால் கேரளாவின் சபரிமலை ஐயப்பன் கோவிலில் கடந்த 2 மாதங்களாகப் பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை. இந்தியாவில் முடக்க நிலை தளர்வைத் தொடர்ந்து இந்த மாதம் பக்தர்களை அனுமதிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன.

இது குறித்து சந்நிதானத்தில் ஒரே நேரத்தில் 50பேர் வீதம் ஒரு மணி நேரத்தில் 200 பக்தர்கள் வரை வழிபடுவதற்கு அனுமதிக்க முடிவு செய்யப்பட்டது. குழந்தைகளும், வயதானவர்களும் இந்தக் காலத் தில் சுவாமி தரிசனத்திற்கு வர வேண்டாம் என்று சபரிமலைக் கோவிலின் நிர்வாகமான தேவசம் சபையின் அமைச்சர் கடகம் பள்ளி சுரேந்திரன் தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில் கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதால் பக்தர்கள் வருகைக்கு தேவசம் சபை மீண்டும் தடைவிதித்துள் ளது. இந்த மாதம் வழிபாட்டில் பங்கேற்க லாம் என்று பக்தர்கள் பலரும் ஆர்வமாக இருந்த நிலையில்இந்தத்தடைஅறிவிப்புஅவர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

# 'பதுங்கு குழிக்குள் மீண்டும் செல்லுங்கள்' ட்ரம்ப்பைச் சாடுகிறார் சியாட்டில் மேயர்

ஜோர்ஜ் ஃபிளாய்ட் கொல்லப்பட்டதையடுத்து அமெரிக்க அதிபர் வாசஸ்தலமான வெள்ளை மாளிகைக்கு முன்பாகப் போராட்டம் நடந்தது. அப்போது அதிபர் ட்ரம்ப்பை புலனாய்வு அமைப்பினர் அங்கிருந்த பாதாள அறைக்குள் அழைத்துச் சென்றதாகச் செய்திகள் வெளியாகின. இந்த நிலையில் அமெரிக்காவின் சியாட்டில் நகர மேயர் ஜென்னி டுர்கன் ட்ரம்ப்பைச் சாடிக் கருத்து வெளியிட்டுள்ளார். எங்கள் அனைவரையும் பாதுகாப்பாக இருக்க விடுங்கள், உங்கள் பதுங்கு குழிக்கே மீண்டும் செல்லுங்கள். நிர்வாகத் திறமை இல்லாத ஒரு நபர் வொஷிங்டன் மாநில விவகாரத்துக்குள் தலையிடக் கூடாது என்று விமர்சித்தார்.

**பின்னணி**

சியாட்டில் மாகாணத்தின் ஒரு பகுதியைத் தன்னாட்சிப் பிரதேசமாக ட்ரம்ப் அறிவித்தார். நீங்கள் சரிவரப் பணியாற்ற வில்லை எனில் நான் செய்வேன் என்று அதை எதிர்ப்புப் போராட்ட விவகாரத்தில் சியாட்டில் மேயர் ஜென்னி டுர்கனை மிரட்டும் தொனியில் பேசினார். போராட்டக்காரர்களை உள்நாட் டுப் பயங்கரவாதிகள் என்று வர்ணித்த ட்ரம்ப் சியாட்டிலை நாங்கள் எடுத்துக் கொண்டுள்ளோம் என்று கீச்சகத்தில் பதிவிட்டார். இதே போல் வொஷிங்டன் கவர்னர் ஜேய் இன்ஸ்லி என்பவரையும் மிரட்டினார். மிரட்டப்பட்ட இருவருமே ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள். இதில் வொஷிங்டன் கவர்னரைத் தீவிர இடதுசாரி கவர்னர் என்றும் ட்ரம்ப் வர்ணித்தார். இந்த நிலையிலேயே சியாட்டில் நகர மேயர் ட்ரம்பைச் சாடியுள்ளார்.

# கனடா - சீனா உறவில் அமெரிக்காவால் சிக்கல்



சீனாவுக்கும் கனடாவுக்கும் இடையில் உராய்வை உருவாக்கும் வகையில் அமெரிக்கா செயற்படுகின்றது என்று கனடா தெரிவித்தது. கனடாவுக்கான சீனாவின் புதிய தூதர் காங் பீவு இவ்வாறு தெரிவித்தார்.

கனடாவைச் சாதகமாகப் பயன்படுத்தி வருகிறது அமெரிக்கா. சீனா - கனடா உறவுகளில் சிக்கலை உருவாக்குகிறது. என்று கனடாவுக்கான சீனத் தூதர் காங் பீவு இதுகுறித்து மேலும் தெரிவித்தார். சீனாவின் ஹுவாவி நிறுவனத் தலைமை நிதி அதிகாரி மெங் வான்ஹோ, கனடாவால் கைதுசெய்யப்பட்டு, அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இது நீதியற்றது. அரசியல் சூழ்ச்சி. உண்மையில் இது சீனாவின் பெரும் நிறுவனங்களை வீழ்த்துவதற்காக அமெரிக்கா திட்டமிட்ட ஒரு கொடிய அரசியல் சம்பவம் என்று நாங்கள் நம்புகிறோம் என்றும் காங் பீவு கூறியுள்ளார். கனடாவில் மெங் கைது செய்யப்பட்ட சிறிது நேரத்திலேயே, கனடாவைச்சேர்ந்த இருவரை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்தனர் என்ற குற்றச்சாட்டில் சீனா சிறைப்பிடித்தது.

பின்னர் மெங் வழக்கைப் பற்றிப் பேசிய கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது நாட்டின் நீதித்துறை சுயாதீனமானது என்பதை வலியுறுத்தினார், அதே நேரம் சீனா சிறைப்பிடித்த இரண்டுபேரையும் விடுவிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

## இந்தியா - சீனா இடையிலான எல்லைப் பிரச்சினை சுமுகமாக நகர்கிறது

எல்லைப் பிரச்சினையை இந்தியாவும், சீனாவும் சரியாகக் கையாண்டு வருகின்றன என்று சீனா கூறியுள்ளது. இந்தியா - சீனா எல்லையிலுள்ள கிழக்கு லடாக் பகுதியில் கடந்த மாதம் 5ஆம் திகதி இந்தியப் படைகளும், சீனப் படைகளும் மோதிக்கொண்டன. இதனால், அந்த பகுதியில் பதற்றம் நிலவி வந்தது. அந்தப் பதற்றத்துக்கு மத்தியில் கடந்த 6ஆம் திகதி இந்தியா - சீனா இராணுவ உயர் அதிகாரிகள் இடையே பேச்சுகள்நடந்தன. அதில், கருத்தொற்றுமைஏற்பட்டதால், எல்லையிலிருந்து இரண்டு நாடுகளின் படைகளும் பின்வாங்கின. இதைத்தொடர்ந்து, நேற்றுமுன்தினம் இந்தியா - சீனா இராணுவ உயர் அதிகாரிகளிடையே மீண்டும் பேச்சுகள் நடந்தன. அதன் பின்னர் இந்தப் பேச்சுகள் குறித்துச் சீன வெளியுறவு அமைச்சகச் செய்தித்தொடர்பாளர் குவா சுன்யிங்கி கூறும்போது, என்னிடம் அதிகமான தகவல்கள் இல்லை. தூதரக வழிமுறை மற்றும் இராணுவ வழிமுறை மூலமாக இரு நாடுகளும் எல்லைப் பிரச்சினையைச் சரிவரக் கையாண்டு வருகின்றன. இந்தியா - சீனா இடையே கருத்தொற்றுமை ஏற்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், எல்லைப் பதற்றத்தைத் தணிப்பதற்கு இரண்டு நாடுகளும் நடவடிக்கை எடுத்துவருகின்றனஎன்றார். இந்த விவகாரம் குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகச் செய்தித்தொடர்பாளர் அனுராக் ஷிவஸ்தவா கூறும்போது, இந்தியா - சீனா இராணுவ உயர் அதிகாரிகள் நடத்திய பேச்சுகளில் இருநாட்டு தலைவர்களின்வழிகாட்டுதலைகருத்திற்கொண்டு, பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண முடிவு செய்யப்பட்டது. எனவே, பிரச்சினையை விரைவாகத் தீர்க்கவும், எல்லையில் அமைதியை நிலைநாட்டவும் இரண்டு நாடுகளும் ராணுவ மற்றும் தூதரகரீதியிலான தொடர்பை மேற்கொண்டுவருகின்றன. இரு தரப்பு உறவுகளின் வளர்ச்சிக்குஇது அவசியம்என்றார்.

# கொரோனா தொற்றின் எதிரொலி ஏழைகள் அதிகரிக்கும் அபாயம்

கொரோனா வைரஸ் தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி 395 மில்லியன் மக்களைக் கடும் வறுமைக்குள் தள்ளக்கூடும், மேலும் உலகளவில் ஒரு நாளைக்கு 1.90 டொலருக்கும் குறைவான வருமானம் பெறுபவர்களின் எண்ணிக்கை 1 பில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு பகுதியான UNU - WIDER ஆல் வெளியிடப்பட்ட இந்த அறிக்கை, உலக வங்கியின் பல்வேறு வறுமைக் கோடுகளைக் கணக்கில் எடுத்து ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளது. தனிநபர் வருமானம் அல்லது நுகர்வுகளில் 20சதீதம் குறைவடையும் என்றும் வறுமையில் வாடுவோரின் எண்ணிக்கை 1.12 பில்லியனாக உயரக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அரசுகள் இது குறித்து அக்கறையெடுத்து வரைவாகக் காரிய மாற்றாவிட்டால், ஏழைகள் எதிர்கொள்ளும் தினசரி வருமான இழப்பை ஈடுசெய்யாவிட்டால், உலகின் ஏழ்மையானவர்களின் நிலை கவலைக்குரியதாக இருக்கும் என்று குறித்த அறிக்கையின் ஆசிரியர்களில் ஒருவரான ஆண்டி சம்னர் கூறினார். கடும் வறுமையில் மூழ்கும் அபாயத்தில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படும் பகுதியாகத்



தெற்காசியா, முக்கியமாக மக்கள் தொகை கொண்ட இந்தியா, இதைத் தொடர்ந்து துணை - சஹாரா ஆபிரிக்கா ஆகியன கருதப்படுகின்றன.





# போராட்டங்களைக் குறிவைத்து வழக்குகள் தொடர முஸ்தீபு!

ஜோர்ஜ் ஃபிளாய்ட்டுக்கு நீதிகோரிப் பிரிட்டனில் தொடர்கின்ற போராட்டங்கள் மீது வழக்குத் தொடர்வதற்குப் பிரிட்டன் பொலிஸார் தயாராகி வருகின்றனர். 2011ஆம் ஆண்டில் லண்டனில் நடந்த கலவரத்துக்கு எதிர்வினையாற்றிய விதத்தில் இந்தச் செயல்முறையை மேற் கொள்ளுமாறு நீதித்துறைச் செயலர் ரொபேர்ட் பக்லேண்ட் நீதிபதிகளுக்குக் கூறினார் எனத் தெரிவிக் கப்படுகிறது. ரொபேர்ட் பக்லேண்ட் மற்றும் உள்துறை அமைச்சர் பிரிதி படேல் ஆகியோரால் மேற்கொள்ளப் படுகின்ற குறித்த திட்டங்களின்படி குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு 24 மணி நேரத்துக்குள் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்றும் பொலிஸார் மீது காழ்ப்புணர்ச்சி, குற்றச் சேதம் அல்லது தாக்குதலை ஏற்படுத்தியதாகக் கண்டறியப்பட்டால் மேலதிகமாகச் சிறைப்படுத்தப் படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவில் ஜோர்ஜ் ஃபிளாய்ட் என்ற கறுப்பின மனிதர் பொலிஸாரின் பிடியில் இறந்ததைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கு அடுத்தபடியாகப் பிரிட்டனில் போராட்டங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவுக்கு மருந்து ரஷ்யாவில் அறிமுகம்

கொரோனாத் தொற்றுக்குச் சிகிச்சையளிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட முதலாவது மருந்து ரஷ்யாவில் அறிமுகம் செய்யப்பட்டது. 'அவிபாவிர்' என்ற இந்த மருந்தைப் பயன்படுத்துவதற்குத் தனது நாட்டு மருத்துவமனைகளுக்கு ரஷ்யா அனுமதி அளித்துள்ளது. கெம்ரர் என்ற நிறுவனம் இந்த மருந்தை உற்பத்தி செய்துள்ளது. இந்த மருந்துக்கு ரஷ்ய சுகாதார அமைச்சகம் அங்கீகாரம் வழங்கி உள்ளது. மாதம் தோறும் 60ஆயிரம் பேருக்குச் சிகிச்சை அளிக்கக்கூடிய அளவில் இந்த மருந்து உற்பத்தி செய்யப்படுவதாகவும், 10 நாடுகள் இந்த மருந்தை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் ரஷ்ய மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை தெரிவித்துள்ளது.



கொரோனாத்தடுப்பூசியைக் கண்டுபிடிக்கின்ற முயற்சியில் வெற்றிகண்டு அண்மையில் மனிதர்களுக்கு அதை ஏற்றிப் பரிசோதித்திருப்பதாக ரஷ்யா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குளோரோகுயினுக்கு விதித்த ஏற்றுமதித் தடை விலகியது

கொரோனாத் தொற்றுக்குச் சிகிச்சையளிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஹைட்ரொக்ஸி குளோரோ குயின் மருந்தை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை இந்திய அரசு நீக்கியது. கொரோனாத் தொற்றுப் பரவ ஆரம்பித்ததும் அது தொடர்பான சிகிச்சைக்குக் ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் மருந்து பரிந்துரைக்கப்பட்டது. இதையடுத்து மார்ச் மாதத்தில் இந்த மருந்தை ஏற்றுமதி செய்வதற்கு இந்திய அரசு தடை விதித்தது. தற்போது அந்தத் தடையை விலக்கியுள்ளது. கொரோனாத் தொற்றுக்குக் ஹைட்ரொக்ஸி குளோரோ குயினை ஆரம்பத்தில் தற்காலிக மருந்தாகப் பரிந்துரைத்த உலக சுகாதார மையமும் இந்த மருந்து குறித்து ஆய்வு முடிவுகள் வந்த பிறகு கொரோனாச் சிகிச்சைக்குப் பயன்படுத்த முடிவு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் பிரசாரத்துக்கான சுதந்திரம் அவசியமானது

## லஷ்மன் கிரியல்ல ஆதங்கம்



தேர்தல் பிரச்சாரத்தினை மேற்கொள்வதற்கான சுதந்திரம் காணப்படவேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், தேர்தலிற்காக அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டுதல்கள் நடைமுறை சாத்தியமற்றவை.

தேர்தல் பிரச்சாரத்தினை மேற்கொள்வதற்கான சுதந்திரம் காணப்படவேண்டும். பேரணியினை நடத்த வேண்டும் என்றால் அதில் கலந்துகொள்ளவுள்ள 100 முதல் 500 பேரின் பெயர்களை சமர்ப்பிக்கவேண்டும் இது சாத்தியமற்ற விடயமாகும்.

தேர்தலை நடத்துவதில் அனுபவமற்றவர்கள் இந்த வழிகாட்டுதல்களை உருவாக்கியுள்ளனர். கட்சிகள் தமது கொள்கை விளக்கத்தை வெளியிடுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும்.

வாக்களிப்பு நிலையங்களில் சமூக விலகலை பின்பற்றினால் மக்கள் வரிசை பல கிலோமீற்றர் தூரத்திற்கு காணப்படும் என மகிந்த தேசப்பிரியவே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் அரசாங்கத்திற்கு 113 ஆசனங்கள் கிடைக்காது என்பது தெளிவான விடயமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தனது தொகுதிக்கு ரணில் இதுவரை என்ன செய்தார்?

## கேள்வி எழுப்புகிறார் முஜிபுர் ரஹ்மான்



முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 24 வருடமாகக் கொழும்பு மத்திய தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். அவருடைய பெயரை நிலை நாட்டி ஏதும் அபிவிருத்தி வேலைகள் செய்துள்ளாரா? என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார கலந்துரையாடல் கூட்டமொன்று கிராண்ட்பாஸ் அவல்ஸாவியாவிலே நடைபெற்ற போதே அவர் இக் கேள்வியை எழுப்பினார்.

கடந்த நான்கரை வருட காலமாக நான் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினேன்.

இளைஞர், யுவதிகளுக்குத் துறைமுகத்தில், அரச அச்சகத்தில், கல்வி அமைச்சில் வேலை வாய்ப்புகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டேன். அவர் அதில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

கொழும்பு மாவட்டத்தில் 23 தேசிய பாடசாலைகள் இருக்கின்றன. பாடசாலைகளில் நிலவிய சிற்றூழியர் வெற்றிடங்களில் கூட, அகில விராஜ் காரியவசம் தனது தொகுதி ஆட்களைக் கொண்டே நிரப்பினார்.

இது பற்றி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டுவந்த போதும் எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

24 வருடம் இப்பிரதேச எம்.பி.யாக இருந்த அவர், எவ்வித அபிவிருத்தி வேலைகளையும் செய்யவில்லை. ஜனாதிபதி பிரேமதாஸ பல வீடமைப்புத் திட்டங்களை உருவாக்கி, கொழும்பு மத்தியிலே அவருடைய பெயரை நிலை நாட்டி இருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்கவால் அவ்வாறு செய்யப்பட்டுள்ளதா? என்றும் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார்.

# சுயதொழில் கண்காட்சி மணியந்தோட்டத்தில்









யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் அனுசரணையுடன் மணியம்தோட்டம் சமூக மேம்பாட்டு சுய முயற்சி குழு நடத்தும் சுயதொழில் கண்காட்சியும் விற்பனையும் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் இயக்குனர் யூசின் பிரான்சிஸ் அடிகளாரால் இன்று காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். மணியம் தோட்டம் பகுதியில் அமைந்துள்ள இயூயின் கல்வி நிலையத்தில் இக் கண்காட்சி இடம் பெற்று வருகிறது.

ஆரம்ப நிகழ்வில் அவ் ஊர் பொதுமக்கள், கிராம சேவையாளர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# தனியார் நிறுவனத்தினுள் புகுந்து வன்முறைக் கும்பல் அட்டகாசம்

## கொடிகாமத்தில் வியாழன் இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

கொடிகாமத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் ஒன்று, அங்கு பணியிலிருந்த ஊழியர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டதுடன், நிறுவனத்தின் உடைமைகளுக்கும் சேதம் விளைவித்து தப்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இரவு 11.40க்கு இடம்பெற்றது என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் வாள், இரும்புக் கம்பி மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வந்திறங்கிய 8 பேர் கொண்ட கும்பல் அங்கிருந்த கண்காணிப்பு கமராக்களை அடித்துடைத்து அடாவடியில் ஈடுபட்டுள்ளது.

அதன் பின்னர் அங்கிருந்த பணியாளர் ஒருவர் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது. சம்பவத்தில் கையில் வாள்வெட்டுக்கு இலக்கான நபர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

தொடர்ந்து நிறுவனத்துக்குள் இருந்த பொருள்களை அடித்து உடைத்து நாசம் செய்த கும்பல் அங்கிருந்து சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடியாகவே கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டபோதும் பொலிஸார் அதிகாலை 3 மணியளிவிலேயே சம்பவ இடத்தில் விசாரணை ஆரம்பித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.





காலைக்கதிர்
Kalaikathir

ஒற்றுமை

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி



நாளைய (13.06.2020) தலைப்பு
ஒற்றுமை

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்புவெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623







# சங்கிலிய மன்னனின் நினைவு தினம் இன்று

**யாழ்ப்பாணம், ஜூன் 12**

**சங்கிலிய மன்னனின் 401 ஆவது நினைவு தினம் இன்று யாழ்ப்பாணத்தில் நினைவுகூரப்பட்டது.**

**நல்லூரில் உள்ள சங்கிலி மன்னன் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.**

**பின்னர் ஜமுனா ஏரியில் மலர் தூவி சங்கிலி மன்னனுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது.**

**இந்த அஞ்சலி நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் தூதுவர் பாலச்சந்திரன் யாழ்.மாநகர பதில் முதல்வர் ஈசன், மறவன்புலவு சச்சிதானந்தம், மதத்தலைவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.**

# ஏற்றுமதி துறையின் சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு அரசு தயார்

## ஜனாதிபதி கோட்டாபய ராஜக்ஷ அறிவிப்பு



**கொழும்பு, ஜூன் 12**

**ஏற்றுமதித் துறையின் பிரச்சினைகள் மற்றும் தடைகளைச் சரியாக இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு முழுமையான உதவியை வழங்க அரசாங்கம் தயாராகவுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஏற்றுமதி வியாபாரத் துறையின் முன்னணி வர்த்தகர்களுடன் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலொன்றின் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

மிகவும் சிறியளவில் உள்ள ஏற்றுமதித் துறையை சர்வதேச சந்தையை இலக்காகக் கொண்டு விரிந்தளவில் எடுத்துச் சென்று நல்ல பெறுபேறுகளைக் கொண்டுவருவது ஏற்றுமதியாளர்களின் முன்உள்ள சவாலாகும்.

கொவிட் 19 நோய்த்தொற்று பரவல் காரணமாகப் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் பின்னடைவை கண்டுள்ளன.

நோயை ஒழித்து நாட்டை வழமை நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளுடன் எதிர்பார்ப்புகளை கடந்து பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு சில வர்த்தகங்கள் மட்டுமே ஒரு பில்லியனுக்கும் அதிகமான அந்நியச் செலாவணி வருமானத்தை ஈட்டுகின்றன.

எனினும் அதனை இன்னும் அதிகளவு விரிவுபடுத்தக் கூடிய வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொவிட் 19 பரவலுடன் உலக பொருளாதாரத்தில் புதிய சந்தையொன்று உருவாகியுள்ளது.

மத்திய கிழக்கு, சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட ஆசிய பிராந்தியத்தில் பாரிய சந்தையொன்று உருவாகி வருகிறது.

சிறிய நாடு என்ற போதும் அரசாங்கம் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளுக்கு அதிக முதலீட்டைச் செய்துள்ளது.

அதனாலேயே கொவிட்19 நோய்த்தொற்றுக்கு வெற்றிகரமாக முகம்கொடுக்க முடிந்தது.

நாட்டில் உற்பத்தி செய்ய முடியுமான விவசாய பயிர்கள் மற்றும் அத்தியாவசியமில்லாத பொருட்களின் இறக்குமதியை இடைநிறுத்தியதன் மூலம் அந்நியச் செலாவணி விகிதத்தை கட்டுப்படுத்தவும், விவசாயிகளை பாதுகாப்பதற்கும் அரசாங்கத்திற்கு முடியுமாக இருந்தது எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொருளாதார புத்தெழுச்சிக்காக அரசாங்க மற்றும் தனியார் துறை வங்கிகளின் பங்களிப்பு குறித்த விமர்சனமொன்று சமூகத்தில் உள்ளது.

வர்த்தகத்திற்காகவும் மக்களின் நலன் பேணலுக்காகவும் அரசாங்கம் வழங்கும் நிவாரணம் வங்கிகளின் மூலம் சமூகத்தை முழுமையாக சென்றடைவதில்லை என தெரியவருகிறது.

அது உடனடியாக தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை எனவும் மத்திய வங்கி அல்லது அரசாங்க வங்கிகளின் அதிகாரிகள் அரசாங்கத்தின் உத்தரவுகளை நடைமுறைப்படுத்தவில்லையாயின் அவர்களை நீக்கிவிட்டு செயற்படுகின்றவர்களுடன் நாட்டின் தேவையை நிறைவேற்றுவதற்கு பின்னிற்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார மந்த நிலையை வெற்றிகொள்வதற்கு பாரம்பரிய சிந்தனையிலிருந்தும் பணி முறைமையிலிருந்தும் விலகி தைரியமாக தீர்மானங்களை மேற்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

## மாட்டை கடித்து குதறிய 15 நாய்கள் மடுவில் நஞ்சு வைத்துக் கொலை

தான் வளர்த்த மாட்டை கடித்தமைக்காக, 15 நாய்களுக்கு நஞ்சுவைத்து கொலைசெய்யப்பட்ட சம்பவம் வவுனியா – மாமடு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் அந்த பகுதி பிரதேசவாசிகள் வழங்கிய முறைப்பாட்டிற்கு அமைய இராணுவ வீரர் ஒருவரை மாமடு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 42 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நபர் நஞ்சு கலந்த இறைச்சியை கொடுத்து நாய்களை கொலைசெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் அந்த பகுதியில், பண்ணையொன்றை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், அதிலுள்ள பசுவையும் அதன் கன்றையும் நாயொன்று கடித்து காயப்படுத்தியுள்ளது. இதனால் கோபமடைந்து நாய்களை கொன்றதாக சந்தேகநபர் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

## மணலைக் கொண்டு செல்வதற்கு இனி போக்குவரத்து உரிமம் தேவையில்லை

கொழும்பு, ஜூன் 13

மணல் உள்ளிட்ட கனிம வளங்களை ஏற்றிச் செல்வதற்கான போக்குவரத்துஉரிமம்பெறும்நடைமுறை மறு அறிவித்தல் வரை நீக்கப்பட்டுள்ளது.

ஜூன் முதலாம் திகதி தொடக்கம் மறு அறிவித்தல்வரை மணல் உள்ளிட்ட கனிமவளங்களை ஏற்றிச் செல்வதற்கான போக்குவரத்து உரிமம் தேவையற்றது என்று சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்கு வளத்துறை அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, தகவல் அளித்ததாக புவிச் சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் தலைவர் அனுர வால்போல தெரிவித்தார்.

இதுதொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அனுர வால்போல குறிப்பிட்டார்.

## பள்ளிவாசல்களை திறக்க தீர்மானம்!

கொழும்பு, ஜூன் 12

பொது சுகாதார அதிகாரியின் பரிசோதனையைத் தொடர்ந்து இன்று வெள்ளிக்கிழமை முதல் பள்ளிவாசல்களைத் திறக்க முடியும் என வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், கொரோனா தொற்று பரவுவதை தடுக்கும் நோக்கில் அரசின் கோரிக்கைக்கமைய சகல மத வழிபாட்டுத் தலங்களிலும் பொதுமக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டில் கொரோனா தொற்றின் தாக்கம்தற்போதுஓரளவுகுறைவடைந்து வருவதால் வணக்கஸ்தலங்களை இன்று முதல் திறப்பதாக அரசு அறிவித்திருக்கின்றது.

அதன் பிரகாரம் முஸ்லிம் பள்ளிவாசல்களையும் இன்று முதல் திறப்பதற்கு வக்பு சபை மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அத்துடன் வணக்கத்தலங்களை மீண்டும் திறக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகளை சுகாதார அமைச்சு வெளியிட்டிருக்கின்றது.

அதன்பிரகாரம்பள்ளிவாசல்களைத் திறக்கும்போது பின்பற்றவேண்டிய நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்றை வக்பு சபை மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இணைந்து அனைத்து பள்ளிவாசல்களுக்கும் அனுப்பியுள்ளது.

குறிப்பாக பள்ளிவாசல்களை வழிபாட்டுக்காகத் திறப்பதற்கு முன்னர் பிரதேச பொதுச் சுகாதார அதிகாரியினால்பரிசோதித்து, அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

அத்துடன் பள்ளிவாசலுக்குள் ஒரு சந்தர்ப்பத்தில் அதிகபட்சமாக 50 பேருக்கே அனுமதி வழங்கப்பட வேண்டும். சுகாதாரப் பிரிவினால் தெரிவிக்கப்பட்டுள்ள ஒரு மீற்றர் சமூக இடைவெளியை பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்படுமாறு அனைத்து பள்ளிவாசல் நிர்வாகிகளையும் கேட்டுக் கொள்கின்றோம்– எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தங்கிலிஸ்க்கு மாறின தமிழக ஊர்கள்!

**தமிழகம் முழுவதும் ஆயிரத்து 18 ஊர்களின் பெயர்களைத் திருத்தம் செய்து, அவற்றை எவ்வாறு உச்சரிக்க வேண்டும், எழுத வேண்டும் என்பது தொடர்பாக நேற்று முன்தினம் அரசாணை வெளியிடப்பட்டது. முக்கிய ஊர்களின் பெயர்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. இதற்குப் பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர். இதில் சில முக்கிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்றும், தமிழ்நாடு என்பதை 'ரமில் நாடு' என்று குறிப்பிடுவதைத் தவிர்த்து தமிழைப் போன்றே ஆங்கிலத்திலும் "THAMIZH NADU" என்று எழுதவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.**

மு. ஹரிஹரன்

தமிழகத்தில் உள்ள ஆயிரத்து 18 ஊர்ப் பெயர்களின் ஆங்கில எழுத்துக் கூட்டல்கள் மாற்றப்பட்டுள்ளன. அவை தமிழ் உச்சரிப்பின் அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதற்குத் தமிழகத்தில் எதிர்வினைகள் எழுந்துள்ளன. தமிழக அரசின் இந்த நடவடிக்கையை சமூக ஊடகங்களில் பலர் ஆதரித்தும் எதிர்த்தும் விமர்சித்து வருகின்றனர். குறிப்பாக Koyampuththoor என்ற ஹேஷ்டேக் மூலம் கோவை மக்கள் பெயர் மாற்றத்தை விமர்சித்துக் கருத்துத் தெரிவித்துவருவது பிரபலமாகி வருகின்றனர்.

### பெயர்மாற்றத்துக்கு நிதி ஒதுக்கீடு

2018 – 2019ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறைக்கான மானியக் கோரிக்கையில் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மாஃபா கே. பாண்டியராஜன், 'தமிழகத்தில் உள்ள ஊர்ப் பெயர்கள் தமிழ் உச்சரிப்புப் போன்றே ஆங்கிலத்தில் அமையும் வகையில் மாற்றம் செய்வதற்கு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும். இதற்கென 5 லட்ச ரூபா நிதி ஒதுக்கப்படும்' என்று அறிவித்திருந்தார். அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர்களின் பரிந்துரைகள் பெறப்பட்டு, ஆலோசனைக்குழுவின் பரிந்துரைப்படி ஊர்களின் ஆங்கில எழுத்துக்கூட்டல் மாற்றி அறிவிக்கப்பட்டுள்ளன.

சென்னை, கடலூர், சிவகங்கை, திருவள்ளூர், புதுக்கோட்டை, கிருட்டினகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தூத்துக்குடி, பெரம்பலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, நாகபட்டினம், விருதுநகர், கரூர், சேலம், தஞ்சாவூர், விழுப்புரம், வேலூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்து 18 ஊர்களின் ஆங்கிலப் பெயர்கள் தமிழ் உச்சரிப்பைப் போன்றே மாற்றப்பட்டுள்ளன என்று தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

### வெள்ளையர்களின் வேலை அது!

குறிப்பாகக் கோயம்புத்தூரின் ஆங்கில எழுத்துக் கூட்டல் Coimbatore ஆக இருந்தது, தற்போது Koyampuththoor என மாற்றப்பட்டுள்ளது. இதேபோல், Tuticorin என்று குறிப்பிடப்பட்டு வந்த தூத்துக்குடி, Thooththukkudi என மாற்றப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்த நடவடிக்கை குறித்துப் பேசிய பதிப்பாளரும் அரசியல் விமர்சகருமான ஆழி செந்தில்நாதன், "பிரிட்டிஷ் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள ஊர்களின் பெயர்களை ஆங்கிலேயர்கள் உச்சரிக்க முடியாததால் அவர்களுக்கு ஏற்ப ஊர்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டனர்.




அவ்வாறு உச்சரிக்கப்படும் ஊர்ப் பெயர்களை தமிழ் உச்சரிப்புக்கு ஏற்ப மாற்றும் அரசின் நடவடிக்கை வரவேற்கத்தக்கது.

தமிழகம், கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட மாநில அரசுகள் தொடர்ந்து இந்தப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. உலகம் முழுவதுமே தாய்மொழி உச்சரிப்பின் அடிப்படையில் பெயர் மாற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" எனத் தெரிவித்தார்.

### காலப்போக்கில் பரிச்சயமாகிவிடும்

"பொதுவாகவே, ஒரு பெயர் அல்லது ஊரின் பெயரைத் தமிழ் உச்சரிப்புக்கு ஏற்ப ஆங்கிலத்தில் எழுதுவதில் பல சிக்கல்கள் உள்ளன. அதனை களையும் வகையில் தரநிலைக்கட்டுப்பாடுகளை பயன்படுத்தி தமிழ் உச்சரிப்புக்கு ஏற்ப ஆங்கிலத்தில் அதனை எழுத வேண்டும். இதுபோன்ற பெயர் மாற்றங்களின் போது ஆரம்பத்தில் கடுமையான விமர்சனங்கள்எழுவதுஇயல்புதான். எடுத்துக்காட்டாக மெட்ராஸ்மாநகரம், 'சென்னை' எனப் பெயர் மாற்றப்பட்ட போது பல விமர்சனங்கள் எழுந்தன. ஆனால் தற்போது சென்னை என்ற பெயர்தான் பரிச்சயமாக உள்ளது. இதேபோல் தற்போது மாற்றம் செய்யப்பட்ட ஊர்களின் பெயர்களும் காலப்போக்கில் பரிச்சயமாகிவிடும்" என்கிறார் ஆழி செந்தில்நாதன்.

### தனித் தமிழ்ப்படுத்தலும் அவசியம்

கொரோனா நோய்த்தொற்று அதிகரித்து வரும் சூழலில் ஊர்ப் பெயர் மாற்றம் அவசியமற்றது என ஒருசாரார் விமர்சித்தபோதும், தமிழ் மொழியின் அடிப்படையில் பெயர் மாற்றும் நடவடிக்கை எப்போது மேற்கொள்ளப்பட்டாலும் வரவேற்கத்தக்கது என்கிறார் எழுத்தாளர் பாமரன்.

"தமிழ் உச்சரிப்புக்கு ஏற்ப ஊர்களின் ஆங்கிலப் பெயர்களில் திருத்தம் செய்வது அவசியமானது. எந்தச் சூழலில் இதைச் செய்தாலும் வர




வேற்கத்தக்கது. அதேநேரத்தில், சமஸ்கிருதம் போன்ற பிறமொழிக் கலப்புகளையும் ஆராய்ந்து தமிழ் ஊர்ப் பெயர்களாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, திருவரங்கம், திருபெரும்புதூர் ஆகிய ஊர்கள் ஸ்ரீரங்கம், ஸ்ரீபெரும்புதூர் என எழுதப்படுகின்றன. இதுபோன்று, தமிழ் அர்த்தம் பொதிந்த பல ஊர்களின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 'பன்னீர் மடை' என்ற ஊர் பன்னிமடை என்றும், 'பூளைமேடு' என்ற பகுதி பீளமேடு என்றும் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் திருத்தத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

### எழுத்துக் கூட்டல்களை மாற்றியதில் என்ன சிக்கல்?

பல நாடுகள் மற்றும் மாநிலங்களோடு கோவை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் வர்த்தகத் தொடர்பில் உள்ளன. கோவை போன்ற தொழில் நகரங்களின் பெயர்கள் மாற்றப்படும் போது பொதுமக்களின் கருத்துகளையும் கேட்டறிய வேண்டும் என்கிறார் கோவையைச் சேர்ந்த வழக்கறிஞரும், எழுத்தாளருமான இரா. முருகவேள்.

"பல நாடுகள் மற்றும் மாநிலங்களோடு கோவை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் வர்த்தகத் தொடர்பில் உள்ளன. இந்த நிலையில் திடீரென நாளை முதல் ஊர்ப் பெயரில் மாற்றம் செய்யப்படுகிறது என அறிவிப்பது ஜனநாயக நடைமுறை என ஏற்றுக்கொள்ள முடியாது. அறிஞர் குழு மற்றும் மக்களின் கருத்துகளை ஆராய்ந்து வெளிப்படைத்தன்மையோடு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். மொழிப் பெருமிதம் அவசியம் என்ற போதும் தொழில் மற்றும் வர்த்தகம் போன்ற காரணிகளையும் கருத்தில் கொண்டு, இது போன்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்" எனத் தெரிவிக்கிறார் முருகவேள்.

நன்றி - பி.பி.ஸி இணையம்

> தமிழ் உச்சரிப்புக்கு ஏற்ப ஊர்களின் ஆங்கிலப் பெயர்களில் திருத்தம் செய்வது அவசியமானது. எந்தச் சூழலில் இதைச் செய்தாலும் வரவேற்கத்தக்கது. அதேநேரத்தில், சமஸ்கிருதம் போன்ற பிறமொழிக் கலப்புகளையும் ஆராய்ந்து தமிழ் ஊர்ப் பெயர்களாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

# நடைமுறை சாத்தியமற்ற மக்கள் விருப்பத்தின் பின்னால் இழுபடுவோர் அரசியல் தலைமையாக இருக்க முடியாது

## இப்படிச் சொல்கிறார் அமைச்சர் டக்ளஸ்





அரசியல் தலைமை என்பது மக்களை வழி நடத்துவதாக இருக்க வேண்டுமே தவிர, நடை முறைச் சாத்தியமற்ற மக்களின் விருப்பங் களின் பின்னால் இழுபட்டுச் செல்வதாக இருக்க முடியாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார்.

மன்னார் மாவட்ட கட்சி செயற் பாட்டாளர்களை இன்று சந்தித்துக் கலந்துரையாடும் போதே அவர் இதனை தெரிவித்துடன் கட்சியின் வேலைத் திட் டங்கள் தொடர்பான சந்தேகங்களை கட்சி செயற்பாட டாளர்கள் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

திடமான அரசியல் கொள்கை, அதனை அடைவதற்கு தேவையான வழிமுறை பற்றிய தெளிவு, மனவுறுதி போன் றவை இருந்த போதிலும் மக்கள் ஆதரவு போதியளவு கிடைக்க வில்லை என்று தனது ஆதங்கத்தை வெளிப்ப டுத்தினார்.

மக்கள் ஆதரவு கிடைக்காத காரணத்தா லேயே இலக்கினை இதுவரை அடைய முடியாமல் இருப்பதாகவும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்

மன்னார் மாவட்டத்திற்கு இன்றையதினம் விஜயம் மேற் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தோவானந்தா மாவட்டத்தின் பல பாகங்களிலும் பல்வேறு சந்திப்புக்களை முன்னெடுத்து வரு கின்றார். இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சஜித்தைத் தான் தலைவராக பார்க்கிறார் அமைச்சர் ராஜித



கொழும்பு, ஜூன் 12

விஜய குமாரணதுங்கவிற்கு பிறகு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் தலை வர் சஜித்தைத் தான் தலைவராக நான் பார்க்கிறேன் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தான் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் மனதளவில் பாதிக்கப்பட்டிருந்த போது சஜித் பிரேமதாச தன்னை தொடர்ந்து கவனித்து வந்ததாக அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

நான் கடந்த காலங்களில் எவ்வளவு வேலை செய்திருந்தேன் என்பதை ஐக்கிய தேசிய கட்சி தேடி ஆராய்ந்து பார்க்கவில் லை என அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி வேட்பாளர் களுக்காக நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## தனிமைப்படுத்தல் காலம் முடிந்த 7 பேர் வவுனியாவுக்கு திரும்பினர்





இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய வவுனியாவைச் சேர்ந்த 7 பேர் தனிமைப்படுத் தல் காலம் முடிவடைந்து வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பொலிஸார் ஊடாக அவர்கள் இன்று வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தியாவுக்கு சென்ற நிலையில் கொவிட் 19 தாக்கம் காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் சிக்கியிருந்த இருந்த பலர் அரசி னால் அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத் தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பாட்டி ருந்தனர்.

அந்தவகையில் இந்தியாவில் இருந்து நாடு திரும்பி மின்னேரியா தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டு பி.சீ.ஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று ஏற்பட வில்லை என உறுதிப் படுத்தப்பட்ட வவுனியா வைச் சேர்ந்த 7 பேர் தனிமைப் படுத்தல் காலம் முடிவடைந்து விடுவிக்கப்பட்டனர்.

அவர்களை வவுனியாவிற்கு அழைத்து வந்த இராணுவத்தினர் வவுனியா பொலிசா ரிடம் ஒப்படைத் தனர். பொலிசார் அவர்களது பதிவு விவரங்களை மேற் கொண்ட பின்னர் வீடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## மாவட்ட ரீதியாக நாடாளுமன்றத்துக்கு தெரிவாகவுள்ளவர்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| அனுராதபுரம் 09 | பதுளை 09 |
| மட்டக்களப்பு 05 | கொழும்பு 19 |
| காலி 09 | கம்பஹா 18 |
| அம்பாந்தோட்டை 07 | யாழ்ப்பாணம் 07 |
| களுத்துறை 10 | கண்டி 12 |
| கேகாலை 09 | குருநாகல் 15 |
| மாத்தளை 05 | மொனராகலை 6 |
| மாத்தறை 07 | புத்தளம் 08 |
| பொலன்னறுவை 05 | திருகோணமலை 4 |
| இரத்னபுரி 11 | நுவரெலியா 8 |
| வன்னி 6 | திகாமடுல்ல (அம்பாறை) 7 |

வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை - 196
தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை - 29
மொத்தம் - 225

# ரணில் பொய் சொல்கிறார் சுகாதார அமைச்சர் கருத்து



கொரோனா தொற்று நோயை கட்டுப்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் 230 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உண்மைக்கு புறம்பான கருத்தை வெளியிடுகிறாரென சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இருந்து 1.9 மில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே பெற்றுக் கொள்ளப்பட்டது.

அந்த வகையில் அடுத்த கட்டமாக 2.3 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

ஆனால் ரணில் விக்ரமசிங்க, 230 மில்லியன் அமெரிக்க டொலர் நிதிஉதவி அரசுக்கு கிடைத்துள்ளதாக கூறியுள்ளார். இது முற்று முழுதுமாக உண்மைக்கு புறம்பான தகவலாகும்.

மேலும் அவர், அரசியல் நோக்கத்தினை அடிப்படையாக கொண்டு செயற்படுகின்றார் என குற்றம் சுமத்தியுள்ளார்.

கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கைக்கு 230 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி வழங்கியுள்ளது. குறித்த நிதி தொடர்பில் சுகாதார அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் என அண்மையில் ரணில் கேள்வி எழுப்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்க பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும்

### யாழ். படைத்தளபதி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். மாவட்டத்தில் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமானது என யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

கரணவாய் வடக்கு கரவெட்டி கொற்றாவத்தையில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் வீட்டுக்கான அடிக்கல் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியினால் இன்று நாட்டிவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரைக்கும் சட்டவிரோதமான போதைப் பொருட்கள் விற்பனை செய்வோர் மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை நாமறிந்த விடயமே.

எனினும் இது தொடர்பாக பொலிஸாரால் துரிதமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொலிஸார் எம்மிடம் உதவிகோரும் பட்சத்தில் நாங்கள் பொலிஸாருக்கும் உரிய உதவிகளை உரிய நேரத்தில் வழங்கி வருகின்றோம்.

என்றபோதும், இந்த விடயங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு நிறைய தகவல்கள் தெரியும். சட்டவிரோதமான செயற்பாடுகளை நிறுத்த வேண்டுமேயானால் பொதுமக்கள் எங்களுக்கு உரிய தகவல்களை வழங்கும் போது நாம் அதனைப் பொலிஸாருடன் இணைந்து அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிரான நடவடிக்கையையும் உடனடியாக நாங்கள் எடுக்க முடியும்.

இதேவேளை, இராணுவத்தினரால் பொதுமக்களுக்கான சமூக வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினர் மக்களுக்குச் சமூக வேலைத் திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டு வருகிறார்கள்.

இதன் ஒரு பகுதியாக வறிய மக்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் பணி முன்னெடுக்கப்படுவதுடன் இது வரை 710 வீடுகளுக்கும் மேல் நாங்கள் வறிய மக்களுக்கு அமைத்துக் கொடுத்திருக்கிறோம் – என்றார்.





## உலக சுகாதார ஸ்தாபனம் 230 மில். டொலர் நிதியுதவி

கொரோனா தொற்று நோயை கட்டுப்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் 230 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உண்மைக்கு புறம்பான கருத்தை வெளியிடுகிறாரென சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில்அவர் மேலும் கூறியுள்ளதாவது, உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இருந்து 1.9 மில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே பெற்றுக்கொள்ளப்பட்டது.

அந்தவகையில் அடுத்த கட்டமாக 2.3 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

ஆனால் ரணில் விக்ரமசிங்க, 230 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி அரசாங்கத்துக்கு கிடைத்துள்ளதாக கூறியுள்ளார். இது முற்று முழுதுமாக உண்மைக்கு புறம்பான தகவலாகும். மேலும் அவர், அரசியல் நோக்கத்தினை அடிப்படையாக கொண்டு செயற்படுகின்றார் என குற்றம் சுமத்தியுள்ளார்.

கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கைக்கு 230 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி வழங்கியுள்ளது. குறித்த நிதி தொடர்பில் சுகாதார அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் என அண்மையில் ரணில் கேள்வி எழுப்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது.


## உடனடி வேலைவாய்ப்பு

காலைக்கதிர் பத்திரிகை நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

- பத்திரிகை விநியோகத்தர்
- விளம்பரம் சேகரிப்பவர்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
- பிரதேச செய்தியாளர்கள்
- அலுவலக செய்தியாளர்கள்

சனி (13/06/2020) மற்றும் ஞாயிறு (14/06/2020) ஆகிய தினங்களில் நேரில் சமூகமளிக்கவும்.

Green Media House (pvt) Ltd
30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
(இந்துக்கல்லூரி மைதானத்திற்கு எதிரில்)
076 443 8623


## போராட்டக்காரர் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கும் சந்திரிகா

முன்னணி சோசலி கட்சி ஏற்பாடு செய்த போராட்டத்தின் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலைத் தாம் கடுமையாக எதிர்ப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

'ப்ளக்லைவ்ஸ்' பிரசாரத்திற்கு ஆதரவாக கொள்ளுப்பிட்டியில் கூடிய அமைதியான எதிர்ப்பாளர்கள் குழுவைக் குறிவைத்துக் கடந்த செவ்வாய்க்கிழமை 9 ஆம் திகதி பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட மிருகத்தனமான மற்றும் வன்முறைத் தாக்குதலை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன்.

இந்த அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் சட்டவிரோதமானது என்ற அரசின் கூற்று எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஒரு ஜனநாயக அரசில், நாட்டின் சட்டங்களை மீறாத வகையில் எதிர்ப்புத் தெரிவிக்க ஒவ்வொரு குடிமகனுக்கும் சம உரிமை உண்டு.

பொது உரிமைக்கு மதிப்பளிப்பது, சட்ட அமுலாக்க அதிகாரிகளின் அதாவது



பொலிஸாரின் கடமையாகும். குடிமக்களின் குடியுரிமை உரிமைகளை மீறாமல் உறுதிப்படுத்தவும் பாதுகாக்கவும் அவர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

இனம், மதம், அரசியல் சித்தாந்தம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு இலங்கையினரதும் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துமாறு நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் எமது நாட்டுக்குள் தனி மனிதனின் சுதந்திரம் மற்றும் மேலாண்மை தரம் பாதுகாக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.06.2020 இல் வெளியிடப்பெற்றது.